26404.

# மாகாண மட்டப் பொதுப் பரீட்சை நவம்பர் - 2017

## கிழக்கு மாகாணக் கல்விக் திணைக்களம்

| தரம் : 06 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம் : 2.00 மணித்தியாலம் |
|---|---|---|
| சுட்டெண் : ........................................................................ | | புள்ளி : |

***எல்லா வினாக்களுக்கும் இவ்வினாப்பத்திரத்திலேயே விடை எழுதவும்.***

**பகுதி - I**

➢ ***மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.***

01) 'அவன் ஏழை மக்களுக்கு அதிக வட்டிக்கு பணம் கொடுத்தான்.' எனும் வாக்கியத்தில் இடம்பெற்ற **'ஏழை'** என்பதன் ஒத்த சொல்
1. பணக்காரன் 2. வறியவன் 3. பேராசைக்காரன் 4. உலோபி

02) "வெளிப்புற வேடப் பொலிவினை நோக்கி...." என்பதில் **'வெளிப்புறம்'** என்பதன் எதிர்க்கருத்து
1. உட்புறம் 2. வெளித்தோற்றம் 3. உள்ளே 4. அகத்தே

03) உயிர்க்குறில் எழுத்துக்களின் எண்ணிக்கை எத்தனை
1. 12 2. 7 3. 3 4. 5

04) 'ஆசிரியர் வகுப்பறைக்கு வேகமாக வருகிறார்.' எனும் வாக்கியத்தில் இடம்பெற்ற எழுவாய்
1. ஆசிரியர் 2. வகுப்பறை 3. வேகமாக 4. வருகிறார்

05) கடுவன் குரங்கிற்கு குளவிகள் கொட்டி விட்டன. என்பதில் **'கடுவன்'** என்பதன் எதிர்ப்பாற் சொல்
1. மறி 2. மந்தி. 3. பெட்டை 4. பேடு

06) கடவுள் இல்லை என்பவன்
1. ஆத்திகன் 2. ஞானி 3. நாத்திகன் 4. தீர்க்கதரிசி

07) விருப்பம், அவா, வேட்கை என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
1. ஆசை 2. நிராசை 3. வெறுப்பு 4. ஆர்வம்

08) இராமா! நீ காட்டை ஆள், உன்தம்பி பரதன் நாட்டை ஆளட்டும் இங்கு இடம்பெற்றுள்ள குறியீடுகள் முறையே
1. வினாக்குறி, கால்மாத்திரை, முற்றுப்புள்ளி
2. வியப்புக்குறி, காற்புள்ளி, முற்றுப்புள்ளி
3. வியப்புக்குறி, வினாக்குறி, முற்றுப்புள்ளி
4. வினாக்குறி, வியப்புக்குறி, முற்றுப்புள்ளி

Log on:-www.knightcreations.tk

Scanned by CamScanner

09) சேரசோழ பாண்டியர்களின் முக்கொடிகளும் முறையே,
1. விற்கொடி, புலிக்கொடி, மீன்கொடி
2. புலிக்கொடி, விற்கொடி, மீன்கொடி
3. மீன்கொடி, விற்கொடி, புலிக்கொடி
4. விற்கொடி, மீன்கொடி, புலிக்கொடி

10) "அழகு மிக்க பிள்ளையே
அங்கும் இங்கும் ஓடியே..." என்பதில் இடம்பெற்ற **'அங்கும் இங்கும்'** என்பது
1. அடுக்குத்தொடர்
2. இணைமொழி
3. இரட்டைக்கிழவி
4. அடுக்கிடுக்குத் தொடர்

11) ஒருவர் செய்த உதவியை எக்காலத்திலும் மறக்கக் கூடாது என்பதனை உணர்த்தும் பழமொழி
1. தர்மம் தலை காக்கும்
2. அடாது செய்தால் படாது படுவர்
3. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
4. பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு

12) Internet (இன்ரநெற்) என்பதன் கலைச்சொல்
1. கணினி
2. வலைத்தளம்
3. முகப்புத்தகம்
4. இணையம்

13) ஏழுலகங்களையும் என்பதைப் பிரித்தால்
1. ஏழு + லகங்களையும்
2. ஏழு + உலகங்களையும்
3. ஏழுல + கலங்களையும்
4. ஏழு உலகம் + களையும்

14) கம்பி எண்ணுதல் என்னும் மரபுத் தொடரின் கருத்து
1. கம்பியை எண்ணிக் கூறுதல்
2. சிறையில் இருத்தல்
3. தப்பி ஓடுதல்
4. தலை மறைவாய் இருத்தல்

15) பின்வரும் சொற்களில் பிழையற்ற சொல்லைத் தெரிவு செய்க
1. பல்களைக்கழகம்
2. பல்கழைக் களகம்
3. பல்கலைக்கழகம்
4. பள்கலைக் கழகம்

16) கோவலனை இழந்த கண்ணகியின் கண்களில் இருந்து பொல பொல என கண்ணீர் சொரிந்தது.
இங்கு **'பொல பொல'** என்பது
1. இணைமொழி
2. அடுக்குத் தொடர்
3. அடுக்கிடுக்குத் தொடர்
4. இரட்டைக்கிளவி

17) பேசப்படும் பொருளைச் சுட்டும் பெயர்
1. தன்மை
2. முன்னிலை
3. படர்க்கை
4. பன்மை

18) பறவைகளின் சத்தம் கேட்டது. என்பதில் உணர்த்தப்படும் காலம்
1. இறந்தகாலம்
2. நிகழ்காலம்
3. எதிர்காலம்
4. வருங்காலம்

19) பின்வருவனவற்றில் அழைப்பிதழில் இடம்பெற வேண்டிய முக்கியம்சங்கள்
1. தலைப்பு, காலம், நேரம், இடம்
2. தலைப்பு, விளக்கம், நன்றி, ஒப்பம்
3. தலைப்பு, முகவரி, விளிப்பு, நன்றி
4. தலைப்பு, விடயவிபரிப்பு, முடிப்பு, குறியீடுகள்

Log on:-www.knightcreations.tk

Scanned by CamScanner

20) வாழவேண்டும், கவலையுமின்றி, வானத்தில், எந்தவித, பறந்து, பறவைகள், திரிவதைப், போல, மனிதர்கள். இச் சொற்களை ஒழுங்குபடுத்தும் போது வரும் பூரண வாக்கியம்.

1. கவலையுமின்றி வாழவேண்டும் எந்த வித பறவைகள் திரிவதை போல வானத்தில் மனிதர்கள்
2. எந்தவித மனிதர்களும் பறவைகள் திரிவதைப் போல் வாழவேண்டும்
3. பறவைகள் வானத்தில் எந்தவித கவலையுமின்றி பறந்து திரிவதைப் போல மனிதர்கள் வாழவேண்டும்
4. மனிதர்கள் திரிவதைப்போல பறவைகள் வானத்தில் கவலையின்றி வாழ வேண்டும்.

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

**01) பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து ஏறக்குறைய 100 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. பழைய புத்தகமொன்றின் சுயசரிதை
2. செய்தித்தாள்களின் பயன்பாடுகள்
3. ஒழுக்கம் உயர்வளிக்கும்
4. மரங்களைப் பாதுகாப்போம்

(20 புள்ளிகள்)

Log on:- www.knightcreations.tk

Scanned by CamScanner

02) சிறந்த உணவுப்பழக்கம் மனித வாழ்விற்கு இன்றியமையாதது என்பதை வலியுறுத்தி உமது நண்பனுக்கு அல்லது நண்பிக்கு 50 சொற்களில் கடிதம் எழுதுக.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

(10 புள்ளிகள்)

03) பின்வரும் பாடலை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

தாமரைப் பூ இதழ்
விரித்து இருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள் கூடி இரை
யுண்ணும் அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை குத்துமில்லை வேறு
வேறிருந்து அருந்தும்
கட்டில்லை கீழ் மேல் என்னும் கண்மூடி
வழக்கமில்லை.

1. இப்பாடலில் கவிஞர் கூறவந்த விடயம் யாது?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

2. புறாக்கள் எவ்வாறு இரை உண்ணும்?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

Log on:-www.knightcreations.tk

Scanned by CamScanner

3. இப்பாடலில் குறிப்பிடப்படும் விரும்பத்தகாத விடயங்கள் இரண்டினை எழுதுக?

.....................................................................................................................

.....................................................................................................................

4. கீழ் குறிப்பிடப்படும் சொற்களுக்குரிய ஒத்த சொற்களை இப்பாடலில் இருந்து தெரிவு செய்து எழுதுக.

1) கமலம் - ..........................................................

2) உணவு - ..........................................................

5. இப்பாடலின் ஊடாக நீர் பெற்றுக் கொண்ட படிப்பினை யாது?

.....................................................................................................................

.....................................................................................................................

(5 x 2 = 10 புள்ளிகள்)

**04) கீழ்வரும் சொற்களின் பொருள் புலப்படுமாறு வாக்கியம் அமைக்குக.**

1. மருப்பு - ..........................................................................................
2. பணி - ..........................................................................................
3. சரிவிகித உணவு - ..........................................................................................
4. வெள்ளம் - ..........................................................................................
5. உற்பாதம் - ..........................................................................................

(5 x 2 = 10 புள்ளிகள்)

**05) உமது பாடநூலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. "ஆண்டவன் அருள் பெற்றவர்களிடத்தில் நாள், கோள், வினைப்பயன் என்பன வலுவற்றுப் போகும்" இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது.

யாரால் - ..........................................................................................

யாருக்கு - ..........................................................................................

2. எழுமை எழு ..........................................................................................

.....................................................................................................................

எனும் குறட்பாவை பூரணப்படுத்துக.

Log on:-www.knightcreations.tk

Scanned by CamScanner

3. தென்னை மரக்கும்மி எனும் பாடத்தில் பந்தல் இடப்படுவதாக கூறப்படும் நான்கு இடங்களைக் குறிப்பிடுக.

1. ..........

2. ..........

3. ..........

4. ..........

4. மழவராயன் கற்ற மூன்று நூல்களின் பெயரைத் தருக.

1. ..........

2. ..........

3. ..........

5. கறையான்கள் ஈசல்களிடம் எவ்வாறு நீதி கேட்டன.

..........

..........

(5 x 2 = 10 புள்ளிகள்)

Log on:- www.knightcreations.tk

Scanned by CamScanner